# கல்லூரி கிரிக்கெட் போட்டி எஸ்.ஆர்.எம்., பல்கலை சாம்பியன்




■ கல்லூரி அணிகளுக்கான, மாநில கிரிக்கெட் போட்டியில், சாம்பியன் பட்டம் வென்ற எஸ்.ஆர்.எம்., அணி.

**காட்டாங்கொளத்துார், ஏப். 7–**
மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டியில், எஸ்.ஆர்.எம்., பல்கலைக்கழக அணி, சாம்பியன் பட்டம் வென்றது.

சென்னை ஐ.ஐ.டி., சார்பில், மாநில அளவிலான கல்லூரிகளுக்கு இடையேயான கிரிக்கெட் போட்டி, அதன் வளாகத்தில் நடந்தது.

இறுதி போட்டியில், எஸ்.ஆர்.எம்., பல்கலை அணி, 50 ஓவரில், ஏழு விக்கெட்டுகளை இழந்து, 308 ரன்கள் எடுத்தது. அதில், பரத் சங்கர், 190 ரன்களும், இரண்டு விக்கெட்டுகளையும் எடுத்தார்.

அடுத்து விளையாடிய, விவேகானந்தா கல்லூரி அணி, 50 ஓவரில், எட்டு விக்கெட் இழப்பிற்கு, 290 ரன்கள் எடுத்து தோல்வியை தழுவியது. எஸ்.ஆர்.எம்., பல்கலை அணி சாம்பியன் பட்டம் வென்றது.

பரத் சங்கர், தொடர் நாயகன் விருதும்; அருண்கண்ணா, சிறந்த பந்து வீச்சுக்கான விருதும் பெற்றனர். இருவரும், எஸ்.ஆர்.எம்., பல்கலை மாணவர்கள். விவேகானந்தா மாணவர் ஞான ஸ்ரீதரன், சிறந்த பேட்ஸ்மேனுக்கான விருதை பெற்றார்.